ஸ்ரீ. உ. வே. வானமாமலை

தே. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியின்

# ஸ்ரீமுகம்

பரந்த ரஹஸ்ய கர்த்தாவின் நிர்ணய விஷயமாக விரிவாகவும் விசதமாகவும் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே நிர்வஹிக்கக் கூடிய ஸாமர்த்தியம் ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமியொருவர்க்கே அஸாதாரணமான தென்று புத்தூர் ஸ்வாமி[illegible]த் தெரிந்திருந்தும் வேணுமென்றே ஸ்ரீஸ்வாமியின் [illegible]ர்த்திக் கல்வெட்டுக்கள் பொருந்திய சிலா ஸ்தம்பத்தில் முட்டிக் கொண்டு அவர் தன் சிரஸ்ஸுக்கு அழிவைத் தேடிக் கொண்டார். அவருடைய செய்கைகளினால் ஸ்ரீஸ்வாமியின் வைபவம் அஷ்ட திக்குக்களிலும் பரிமளிக்கவே ஹேதுவாயிற்று. பகவத் ஸங்கல்பம் இதுவே போலும்.

25—8—49]       வானமாமலை ஸ்ரீநிவாஸாசார்ய தாஸன்.

762 T 86.00+01

http://acharya.org

ஸ்ரீ

# முன்னுரை.

## ஸ்ரீ உ. வே. நங்கவரம் ராகவாசாரியர் ஸ்வாமி.

(நெ. 10 மேலைச்சித்திரவீதி, ஸ்ரீரங்கம்.)

* யச:காயேந ஜீவதி* என்கிற பழமொழிக்கு ப்ரதம லக்ஷ்யபூதரான ஸ்ரீமத் பரமஹம்ஸ. அயோத்யா. ராமாநுஜஜீயர் ஸ்வாமி ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஆஸ்தானத்தை அலங்கரித்திருந்தகாலத்தில், மஹாவித்வான், பண்டிதரத்னம் இத்யாதி பிருதாலங்க்ருதர்களான ஸ்ரீமத் காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி, மைஸூர் குப்பண்ணா ஸ்வாமி, மெய்யுவையங்கார்ஸ்வாமி, பஹூகுடும்பி ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி முதலான பெரியோர்கள் திக்கஜங்கள்போலவும் ஸிம்ஹங்கள் போலவும் ஜீயர்ஸ்வாமிக்கு உசாத்துணையாயிருந்து அநேக க்ரந்த சோதனங்களும் பரிஷ்காரங்களும் நடந்த விஷயத்தை இப்போது நினைக்க அவகாசமேற்பட்டது. மேலே குறித்த ஸ்வாமிகளெல்லோருமாய்ச் சேர்ந்து நிர்ணயித்த விஷயத்தையே ஜீயர்ஸ்வாமி அஷ்டாதசரஹஸ்யப்பதிப்பில் வெளியிட்டிருந்தார். அப்போது, வித்வான் உத்தமசீலிஸ்வாமியும் ஜீயர் ஸ்வாமிக்கு பாதச்சாயையாயும் பாதரேகையாயுமிருந்து, வலத்திருக்கையாகவுமிருந்து அநேக கார்யங்களை நிர்வஹித்தார். சென்ற வருஷத்தில் பரந்தரஹஸ்யம் தமிழ் லிபியில் அச்சாகிவந்த புத்தகத்தை ஒருவர் உத்தம சீலி ஸ்வாமியிடம் கொணர்ந்துகாட்டினபோது திருமேனி பாங்கில்லாமலிருந்த அவர் ஸ்ரீகாஞ்சீ அண்ணங்கராசார்யர் ஸ்வாமியின் முகவுரையை முன்னம் கடாக்ஷித்து, அப்போது அருகிருந்த அடியேன் போல்வாரிடத்தில் ஸாதித்

http://acharya.org

ததாவது—"எல்லா விஷயங்களையும் ஆழ்ந்து ஆராய்பவரான நம் அண்ணங்கராசார்யஸ்வாமியும் இப்படி யெழுதி விட்டாரே; ஜீயர்ஸ்வாமி பதிப்பித்தருளின அஷ்டாதச ரஹஸ்யத்தில் இதுவிஷயமாய் வ்யக்தமாக எழுதப்பட்டிருப்பதை அவர்பார்த்திருக்கமாட்டாரா? அவரே இப்படி எழுதிவிட்டாரென்றால் இனி இது எப்படி திருந்தப்போகிறது? எப்படி மாறப்போகிறது? என்போல்வார் உண்மையையெடுத்தெழுதினால் நல்ல காலமாய் ஏற்றுக்கொண்டால் ஸரி; வாதப்ரதிவாதங்கள் தோன்றிவிட்டால் படுக்கையிலே நோயாளியாய்க்கிடக்கிற நான் என்னபண்ண முடியும்? யாராவது தகுந்தமுறையிலே அண்ணங்கராசார்யருக்குத் தெரிவித்து கவனிக்கச்செய்தால் நன்றாயிருக்குமே" என்று சொல்லிச்சொல்லி நொந்துகொண்டேயிருந்தார். அவர் திருநாடலங்கரிப்பதற்கு நாலுநாள் முன்னம் ஆச்சான்பிள்ளையஷ்டாத்யாயீவந்தது; அதை அந்த ஸ்வாமி நன்றாய்க் கடாக்ஷிக்க முடியாமலே வெகு அசக்தராயிருந்தார். ஆனாலும் அவருடைய திருவுள்ளத்திலிருந்த பெரிய துயரம் நீங்கி ஸந்தோஷமுண்டானதை அடியேன்போல்வார் நன்கறிவோம்.

எதிர்க்கக்ஷியி லுள்ளவர்களைப் போல் நாமும் வைகுண்டவாஸிகளை ஸாக்ஷியிடுவதாக நினைக்கவேண்டாம். நேற்று பங்குனிமாத முடிவில் நடந்ததாய் ஸ்ரீரங்கத்திலுள்ளார் பெரும்பாலு மறிந்ததான இவ்விஷயத்தைக் கொண்டு நாம் அபூர்வமாக வொருலாபமுமடைய விரும்பவில்லை. ஸ்ரீ. உ. வே. வித்வான். திரு. கோவிந்தாசார்ய ஸ்வாமியுள்ளிட்ட ஸகலரும் நன்கறிந்த விஷயமிது. இது ஸம்பந்தமாக ஏதத்க்ஷணபர்யந்தம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி மூலமாக வெளிவந்திருக்கிற வெளியீடுகளில் ப்ரளயேபி ந லீயதே என்னும்படியான விஷயங்கள்

http://acharya.org

முத்தும் மணியும் வயிரமும் போல் விளங்குவதால் நித்ய விபூதிவாஸிகளோடு லீலாவிபூதிவாஸிகளோடு வாசியற ஒருவருடைய அபிப்ராயமும் தேவையில்லையே. நூற்றுக் கணக்கான லக்கங்களிட்டு ஸ்வாமியெழுதியிருக்கிற விஷயங்களில் ஒன்றுக்குக் கூட நேர்நின்று பதில் எழுத யுககோடிஸஹஸ்ரமானாலும் சக்தி பெற முடியாதவர்கள் இண்டெக்ஸ்பண்டிட்ஸ்) என்று சொல்லக்கூடியவர்களும் தம்முதவிகொண்டு ஜீவிப்பவர்களுமான சிலருடைய பெயரையிட்டு எத்தனையபிப்ராயபத்ரிகைகள் வெளியிட்டுக் கொண்டாலும் ஸத்யம் ஸத்யமேவ ஜயதி என்பதற்கு ஒரு ஹானியுமில்லையே.

இந்த விசாரத்தில் ஒருவிதமாகவும் ஸம்பந்தப்பட யோக்யதையற்றவரான கோழியாலம் ரங்கநாதர் எதிரிக்கு பாஷாமஞ்ஜரி முதலானவை பாடம் சொல்லுமவர் இதில் தலையிட்டு அபிப்ராயம் கொடுக்க கிஞ்சித்தாவது அவகாசமுண்டாவென்பதை யாவரும் விமர்சிக்கலாமே. அவருடைய பெரிய தகப்பனாராகிய கோழியாலம் யதிகள் பட்டிருக்கிற பங்கங்களுக்கு இவருடைய எழுத்து விஜயத்வஜமாக நிற்பது தவிர வேறுண்டோ ?

பிராமாணிகர்களான மேதாவிகள் எழுதும் நூல்களிலோ வியாஸங்களிலோ பிரமாணங்களும் யுக்திகளுமே மலிந்திருக்கும். ப்ரமாண யுக்திகளைக் கொண்டு விஷயங்களை ஸ்தாபிக்க சக்தியற்றவர்கள் நிந்தைகளையே நிரப்ப வேண்டியவர்களென்பதும் தொன்மையாக ஏற்பட்ட விஷயம். ப்ரக்ருதவிவாத விஷயத்தில் ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியின் ஒவ்வொரு வெளியீடும் ப்ரமாண யுக்திகள் நிரம்பப் பெற்றிருப்பது ப்ரதிபக்ஷிகளுடையவும் நெஞ்சை யுருக்கக் கூடிய தென்பதில் ஸந்தேஹமுண்டோ.? யுக்திகளில்

http://acharya.org

தலையானதாக அவர் ஸாதித்திருப்பது ஒன்றே போதும்; அதாவது, நம்பிள்ளை திருவடிகளில் நேராகக் கேட்ட பெரியவாச்சான் பிள்ளையே பரந்தரஹஸ்யம் முதலிய பல ரஹஸ்ய க்ரந்தங்களையும் அருளிச் செய்திருந்தால் அவருடைய திவ்யப்ரபந்த வியாக்கியானங்கள் போலவே அந்த ரஹஸ்யங்களும் அன்று தொட்டே காலக்ஷேப க்ரந்தமாக வந்திருக்குமே. 700-வருஷங்களுக்கிப்பால் இதைப்பற்றின சர்ச்சை ஏற்படவேண்டியிராதே யென்பது. ஈதொன்றுக்கு பதில் சொல்ல முன்வரமாட்டாதவர்கள் எது எழுதித்தான் என்ன பயன் ?

இவ்விஷயத்தில் ஸ்ரீ. உ. வே. வித்வான். மெ. ஸுந்தரராஜாசாரியர்ஸ்வாமி விரிவாகவும் வெகு அழகாகவும் எழுதியுள்ள க்ரந்தம் ஸ்ரீரங்கத்தில் வாழும் ஸகல விவேகிகளாலும் ஆமோதிக்கப்பட்டு வெளிவருவதால் அடியேன் இவ்வளவோடு விச்ராந்தியடைகிறேன்.

தாஸன் ராகவன்.

ஸ்ரீரங்கம்—(18—8—49.)

## சிறு விண்ணப்பம்.

ஸ்ரீ ஸுதர்சன பத்ராதிபரான புத்தூர் ஸ்வாமிக்கும், ஸ்ரீ ராமாநுஜ பத்திராதிபரான ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமிக்கும் அடியேன் 8—8—49-ல் தனித்தனி இரண்டு விண்ணப்பமெழுதிக்கொண்டேன். (அதில் எழுதின விஷயமாவது)

"அடியேன் செய்யும் விண்ணப்பம். கடந்த சிலமாதங்களாக இருவர் சார்பிலும் வெளிவந்த பரந்தரஹஸ்ய வாதப்ரதிவாதங்களில் அடியேனைப் போன்றவர்களின் நேரிடையான ஸம்பந்தம் ஒன்றுமில்லாமையால் உபே

http://acharya.org

க்ஷித்திருக்க நேர்ந்தது. இப்போது, வாளாவிருப்பவர்களையும் ஸம்பந்தப்படும்படி செய்யக் கூடிய விஷயங்கள் வெளிவந்திருக்கிறபடியால் அவச்யம் இந்த வ்யவஹாரத்தில் தலையிடும்படி நிர்ப்பந்த மேற்படுகிறது. ஆகவே இது விஷயத்தில் அடியேன் எழுதக் கூடிய வியாஸங்களை உடனுக்குடன் தங்கள் பத்திரிகைகளில் அவச்யம் வெளியிட வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன். ஒருவாறு அப்படி வெளியிட அவகாசமோ ஸௌகரியமோ இல்லாவிடில் அந்த அபிப்ராயத்தை உடனே க்ருபை செய்து தெரிவிப்பதுடன் தங்கள் பத்ரிகைகளின் சந்தாதாரர்களின் ஜாபிதா ஒன்றைத் தவறாமல் அவசியம் அனுப்பிவைக்க வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்" என்பதே. இந்த விண்ணப்பத்திற்கு புத்தூர் ஸ்வாமி இதுவரை யாதொரு பதிலும் அருள் செய்யவில்லை. ஸ்ரீராமாநுஜ பத்திரிகை ஆபீசிலிருந்து மாத்திரம் பதில் கிடைத்தது. பத்ரிகையில் வெளியிட அவகாசமில்லை யென்று தெவித்து சந்தாதாரர்களின் ஜாபிதாவை அனுப்பினார்கள். அதனால் இது ப்ரத்யேகமாக அச்சிட்டு வெளியிட நேர்ந்தது.

இங்ஙனம்,

மெ. ஸுந்தரராஜாசார்யர்

ஸ்ரீ விலாஸம் அச்சுக் கூடத்தலைவர்.

கீழ்ச்சித்திரைவீதி, ஸ்ரீரங்கம்.

http://acharya.org

# A Towering Spiritual Persanality

Sri P.B. Annangaracharya Swami is a towering personality in the spiritual world of to-day. When he sits to lecture to congregations, one is reminded of the famous stanza of Sri Vedanta Desikar regarding Sri Ramanuja in his Yathiraja Sapthathi—"Upaveethinam Oordhwa Pundravantham" etc. When he begins to expound Sri Bhashya or any other concept of obtruse Sri Vaishnava Siddhanta in his own masterly and inimitable style, our mind goes back to 1,000 years when the great Acharya of the Siddhanta similarly acted in furtherance of the Mission of his Life. When we hear his torrential eloquence, keeping the audience spellbound for hours together, our mind again goes back to 500-600 years when the great disciple of the great Master, namely, Sri Manavalamamuni, is stated to have kept thousands of people in earnest attention and enthusiastic raptures over long periods. The style of Sri Annangracharya and his method of exposition are forceful, clear, majestic, logical and appealing alike to the head and the heart. His knowledge of Ubhaya-vedanta is very deep and in his lectures quotations from both Sanskrit and Tamil scriptures flow with astonishing facility. I can say with-

http://acharya.org

out the fear of contradication that he is by far-the most powerful and eloquent exponent of Sri Vaishnava Siddhanta during modern times.

With all that, his catholicity is something admirable. Though he is a strict follower of Tennacharya Sampradayam, he is one of the greatest admirers of Sri Vedantha Desikar and never fails to quote him in his lectures and ex positions. for the resurrection of Sri Vedanta Desikar's writings, no man has rendered greater service than he by the publication of the complete works of the great Master. Not only that, while strong in his eonvictions of Visishtadwaita, his intellect is broad enough to accommodate the other two systems of philosophy, namely Adwaita and Dwaita. Sri P. B. Annangaracharya, as Sri Vedanta Desikar has shown himself to be in his works like Satha Dhushani, is a strong contraversialist. But he will enter into a eontraversy only on important matters and again only when absolutely necessary. On such occasions he is never afraid to be hit hard nor does he hesitate to hit back with vigour and persistency and with arguments which will never fail to convince and carry the world with him as is evident in the recent contraversy over Paranda Rahasyam. But he is essentially a man of peace and a lover of unity and concord. It was with extreme delight that

http://acharya.org

I heard him expounding the other day in New Delhi that Visishtadwaita was capable of sitting in the centre with its one arm round the neck of Adwaita and the other round that of Dwaita and embracing both in perfect concord and happiness.

His literary contribution is prodigious and monumental. I have seen him working at this age of his life for more than 18 hours a day—writing, writing, writing, or speaking, lecturing and expounding. His Annotation of Tiruvoimozhi is an outstanding contribution which has been mainly instrumental in spreading the gospel of the Alwars far and wide amongst the lay public. His other works are also equally valuable. It would be no exaggeration to say that by his untiring efforts Visishtadwaita literature has been resurrected, popularized and made to live for eternity in the form of printed books.

All devotees of this great personality like my humble self should join in praying to Sriman Narayana to grant long life and robust health to Sri Annangaracharya so that he can continue to serve the cause of Visishtadwaita with the same amount of zeal and enthusiasm with which he has served it during the last 40 years.

10, Asoka Road,
New Delhi,
22-8-49.

S. R. S. RAGHAVAN,
*Eiditor, Commercial Publications,*
*Ministry of Commerce.*

http://acharya.org

# ஒளிபொருந்திய ஞானிகளின் சிகரம்.

(ஆங்கில வியாஸத்தின் மொழிபெயர்ப்பு.)

ஸ்ரீ. P.B அண்ணங்கராசார்யர் ஸ்வாமி தற்காலத்திய ஆத்மஜ்ஞானிகளில் சிறந்த சிகரமாக விளங்கும் ஒரு மஹா புருஷர். மாபெரும் சபைகளிடை இவர் உபந்யஸிக்கும் போது, ஸ்ரீ வேதாந்ததேசிகர் தம்முடைய யதிராஜ ஸப்ததியில் ஸ்ரீ ராமாநுஜரைப்பற்றி அருளிச்செய்த "உபவீதிநம் ஊர்த்வ புண்ட்ரவந்தம்" என்று தொடங்கும் சுலோகம் ஞாபகத்திற்கு வருகிறது. ஸ்ரீ பாஷ்யத்தைப்பற்றியாகிலும் சரி, இன்னமும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அழுந்திக் கிடக்கும் எந்த நுண்ணிய விஷயத்தைப் பற்றியாகிலும் சரி, இவர் தம்முடைய ஒப்பிலா நடையில் மிகவும் ஸாமர்த்தியமாக விளக்கிக் கொண்டுபோகும் ரீதியைக் கண்டால், ஏறக்குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன் இம்மதத்தைத் திடமாக ஸ்தாபித்து தேசமெங்கும் பரவச் செய்து தம்முடைய வாழ்க்கைப் பணியைப் பூர்த்தி செய்த ஓர் பெரிய ஆசாரியரே (இராமாநுஜனே) ஞாபகத்திற்கு வருகிறார். கேட்போர் மனதை அனேக மணி காலம் ஸ்தம்பிக்கச் செய்யும்படி இவர் சரமாரியாகப் பொழியும் அமுத மொழிகளைக் கேட்கும்போது, 500 அல்லது 600 வருஷங்களுக்கு முன் இதே ரீதியாகத் தம்முடைய சிஷ்யவர்க்கங்களின் மனதைக் கவர்ந்து அவர்களைக் குதூஹலிக்கச் செய்த ஸ்ரீ மணவாள மாமுனிகளென்னும் பெரிய ஆசாரியரே நமது மனக்கண் முன் வந்து நிற்கிறார். ஸ்ரீ அண்ணங்கராசாரியரின் உபந்யாசங்கள் மிகவும் தெளிவாகவும் கம்பீரமாகவும் அதிக சக்தி வாய்ந்தவையாகவும், யுக்திக் கனுகுணமாகவும் இருந்து நமது ஹ்ருதயத்தைக் கவர்கின்றன. உபய வேதாந்தத்தி

http://acharya.org

லேயும் இவர் மிகவும் ஆழ்ந்த ஞானம் படைத்தவர். இவருடைய உபந்யாசங்களில், ஸம்ஸ்க்ருதம், தமிழ் இவ்விரண்டு பாஷைகளிலுமுள்ள ஸகல கிரந்தங்களி லிருந்தும் மேற்கோள்கள் மிகச்சுலபமாக, நாம் ஆச்சர்யப்படும் வண்ணம் கொட்டுகின்றன. தற்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தை அதிக சக்தியுடன் ப்ரகாசிக்கச் செய்பவர்களில் முதன்மையாக நிற்பவர் இவர் ஒருவரே என்பதை ஒருவரும் மறுக்கமுடியாது என்று நான் நிச்சயமாகவும் தைரியமாகவும் சொல்வேன்.

மேலும் இவரது தாராளகுணம் போற்றத் தக்கது. இவர் தென்னாசாரிய சம்பிரதாயத்தைத் திடமாகத் தழுவியிருந்தாலும், ஸ்ரீ வேதாந்த தேசிகனை இவர் மிகவும் உகந்து அவரது ஸ்ரீ ஸூக்திகளைத் தமது உபன்யாசங்களில் அதிகமாகக் கையாளுவதில் தயங்குவதில்லை. ஸ்ரீ வேதாந்த தேசிகனின் க்ரந்தங்களைப் புதுப்பித்து அவைகளையெல்லாம் ஒன்று சேர்த்து (ஸ்ரீ தேசிக கிரந்தமாலா வென்னும்) ஒரே பதிப்பாக இவர் ப்ரசுரித்த ஒரு மாபெரும் உதவியைப்போன்ற பணி வேறு ஒருவரும் செய்யவில்லை. தவிர இவர் விசிஷ்டாத்வைத மதத்தை முழு நம்பிக்கையுடன் தழுவியிருந்தாலும், அத்வைதம் த்வைதம் என்னும் மற்ற இரண்டு சித்தாந்தங்களுக்கும் தமது விசாலமான புத்தியில் ஸ்னேகபாவத்துடன் இடந்தந்திருக்கிறார்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் சததூஷணி முதலான வாதக்ரந்தங்களையும் எழுதியிருப்பதுபோல் நம் P. B. A. ஸ்வாமியும் வாதக்ரந்தங்களையும் எழுதுவதிலும் மிக்க ருசியும் வல்லமையுமுள்ளவர். மிகவும் அவச்யமான விஷயங்களிலேயே இவர் வாதக்ரந்தங்கள் எழுதியுள்ளார். ஷடிவாதங்களில் பிறர் கடினமாகத் தாக்கினாலும் இவர் சிறி

http://acharya.org

தும் அஞ்சமாட்டார். ஒழுங்கு தவறும்படி எதிர்வாதங்களை யெழுதி தன்வாதத்தையே உலகம்மெச்சும்படியாகச் செய்துகொள்வது இவருடைய இயல்பு. ஸமீபகாலத்தில் ''பரந்த ரஹஸ்யம்'' என்கிற க்ரந்த விஷயமாக நடந்த சர்ச்சையே இதை நன்கு விளக்கும். ஆனாலும் இவர் ஹ்ருதயபூர்ணமாக ஸமாதானத்தையும் ஒற்றுமையையுமே விரும்புபவர். இவர் புதுடெல்லியில் அன்று செய்த உபந்யாசத்தில் ''விசிஷ்டாத்வைத மதமானது அத்வைதத்தை ஒரு கையாலும் த்வைதத்தை மற்றொரு கையாலும் தழுவி அணைத்துக்கொண்டு, அவைகளுடன் சாந்தமாகவும் சந்தோஷமாகவும் நடக்கவல்லது'' என்பதையே அதிக சாமர்த்தியமாக விளக்கிக்கொண்டு போனது எனக்குப் பேரானந்தத்தை விளைவித்தது.

இவருடைய க்ரந்த பிரசுரங்கள் மிகவும் அதிகமானவை, மலைபோலுள்ளவை. இந்த வயதிலும் இவர் தினந்தோறும் 18 மணிகளுக்கு மேலாக க்ரந்தங்களை மேன்மேலும் எழுதுவதிலேயும், சாஸ்திர விஷய சம்பாஷணைகளிலேயும், உபன்யாசங்களிலேயுமே தம்முடைய பொழுதைப் போக்குவதை நாம் பார்க்கிறோம். இவரது திவ்யப்ரபந்த வியாக்யானம் இவர் நமக்களித்த ஓர் பேருதவியாகும். ஆழ்வார்களின் திவ்ய உபதேசங்களை நாடு நகரமும் நன்கறியப் பரவச்செய்வதற்கு இதுவே ஓர் பெரிய பணியாகும். இவர் செய்திருக்கும் மற்ற பணிகளும் மிகமிக மதிப்பு வாய்ந்தவை. விசிஷ்டாத்வைத மதத்தின் சீரிய க்ரந்தங்கள் இவருடைய விடா முயற்சியினாலேயே புத்துயிரளிக்கப்பெற்று, எல்லோரும் அறியும்படி பரவச் செய்யப்பட்டு, நேர்த்தியான புத்தகங்களாய்ப் பதிப்பிக்கப்பட்டு, காலதத்துவமுள்ள வரையிலும் வாழ்விக்கப்பட்டதென்றால், இது மிகையாகாது.

http://acharya.org

நடந்த நாற்பது வருஷங்களாக இவர் விசிஷ்டாத்வைத மதத்திற்காகப் பணிசெய்து வந்த வண்ணமே இன்னமும் அதிக ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் மேன்மேலும் பணிசெய்து நம்போல்வாரை வாழ்விக்கும்படி, இவருடையகாலம, தேஹாரோக்யத்துடன் பல்லாண்டு பல்லாண்டாய்ச் செல்ல வேண்டுமென்று, இம் மஹாபுருஷரிடம் ஈடுபடும் அடியேனைப் போன்ற பக்தர்கள் எல்லாரும் கூடி ஸ்ரீமந்நாராயணனைப் பிரார்த்திப்போமாக.

S. R. S. ராகவன்,

10, அசோகா வீதி, புதுடெல்லி, } பதிப்பாசிரியர், வர்த்தக வெளியீடுகள், வர்த்தகமந்திரி சபை.

ஸ்ரீ:

# ஸ்ரீஸுதர்சந ப்ரஸாதம்.

ஸ்ரீரங்கம், மெ. ஸுந்தரராஜாசார்யர் இயற்றியது.

ஸமீபகாலமாகப் பரந்த ரஹஸ்யமென்னும் க்ரந்தம் பெரியவாச்சான்பிள்ளை செய்தருளியதா? அல்லது நயினாராச்சான்பிள்ளை செய்தருளியதா? என்கிற விஷயம்பற்றி மஹாவித்வான் ஸ்ரீ. உ. வே. காஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியினாலும், திருச்சி புத்தூர் அக்ரஹாரத்தில் வாழ்ந்துவரும் அட்வகேட் ஸ்ரீ. உ. வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியினாலும் சில வெளியீடுகள் வெளியிடப்பட்டு வருகிற விஷயம் அனைவருமறிந்ததேயாகும். தற்காலம் விவாத விஷயங்கள் மறந்து வசவு மொழிகளில் சில வெளியீடுகள் புத்தூரிலிருந்து வெளிவந்துகொண்டிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயம். விவாத விஷயமான பரந்த ரஹஸ்ய க்ரந்தம் பெரியவாச்சான்பிள்ளையருளியதானாலும் ஆச்சான்பிள்ளை யருளியதானாலும் நமக்கு வாசியில்லை. இரண்டும் நமக்கு உபாதேயமே. இதில் விவாதம் ஏதுக்கு? என்று கூறும் சில பெரியோர்களும் உளர். இதில் எள்ளளவும் ஆக்ஷேபமில்லை, அவசியம் ஏற்படாவிடில் வாளாவிருக்கலாம். அவசியம் ஏற்பட்டுவிட்டால் ஆராயவேண்டியது அவசியம்தானே.

இவைகளில் நடுநிலைமை வஹிக்கும் நாம் விவாதம் எவ்வளவுதூரம் செல்லுகிறது, என்னென்ன விஷயங்கள் சொல்லப்படுகின்றன என்பதை நெடுநாளாக கவனித்

http://acharya.org

துக்கொண்டேவந்தோம். தற்காலம் விஷயங்கள் முடிந்து ஒருதலை பக்ஷையாக நிந்தைகளில் இறங்கிவிட்டதால் இனி எதிர்பார்க்கவேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தாலும் சில தவருன விஷயங்கள் வெளிவந்ததாலும் இப்போது நாம் இதில் இறங்கவேண்டி வந்தது.

இங்கு நம்மால் எழுதப்படும் விஷயங்களில் மிகச்சிறிது நிந்தைக்கும் அவகாசமில்லாதபடி செம்மையான முறையில் எழுதிவருகிறோம். இதில் ஒருவருக்கும் அபிப்ராய பேதம் இருக்கவே முடியாது. விஷயங்களில் எவருக்காவது அபிப்ராயபேதம் ஏற்படுமானால் நெறிதவருது நேரான முறையில் யாதொருவித நிந்தைகளும் செய்யாமல் விஷயங்களில் மாத்திரம் நிஷ்பக்ஷபாதர்கள் உகக்கும் முறையில் எவ்வளவும் எழுதலாம். அதற்கும் ஒழுங்கான முறையில் பதில் எழுதக்கூடியவற்றிற்கு அவசியம் எழுதுவோம். இதைவிட்டு விஷயங்களில் செல்லாமல் மறுபடியும் வசவுவழியிலேயே புத்தகம் எழுதியோ அல்லது வேறு முறையிலோ கை (வாய்) வைத்தால் பிசாசங்களுக்குப் பிசாச பாஷையிலேயே பேசவேண்டுமென்னும் ஆன்ருேர் மொழிக்கிணங்க அவசியம் ஏற்படின் அவ்வழியில் செல்லத் தயங்கமாட்டோம். ஆனல் அவ்வழியில் செல்லும்படி ஒருவரும் செய்யமாட்டார் என்றே மிகவும் நம்புகிறோம்.

இந்த விவாதத்திற்கு இப்போதாக ஏற்பட்ட மூல காரணம் என்ன? என்பதை முதலில் சிறிது தெரிவிக்கிறோம். புத்தூர்வக்கீல்ஸ்வாமியும் காஞ்சீஸ்வாமியும்சேர்ந்து பரந்தரஹஸ்யமென்கிறக்ரந்தத்தை அச்சிட ஆரம்பித்தார்கள்; , புத்தூரில் புதிதாக 'ஸ்தாபிக்கப்பட்ட அச்சுக் கூடத்தில் அச்சு நடந்து வந்தது. ஷை அச்சில் இவ்விருவருக்கும் துல்யமான அதிகாரமா? ஒருவருக்கே பூர்ணதி

http://acharya.org

காரமா என்பது ஒரு விவாத விஷயம். புத்தூர் ஸ்வாமி கள் தமக்கே பூர்ணாதிகாரமென்கிறார். அப்படியே வைத்துக்கொள்வோம். புத்தகம் அச்சு முடிந்த பிறகு, பெரியவாச்சான் பிள்ளை யருளிச் செய்ததாக அச்சிடப் பட்ட அந்த பரந்தரஹஸ்ய புத்தகத்தில் 600 காபிகளில் பாதியான 300 காபிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பிய காஞ்சீபுரம் ஸ்வாமிகள் குறைந்த பணத்தைக் கொடுக்க வந்ததாகவும் தாம் அதற்கு இசையாமல் போகவே தம் மேல் கோபமும் வெறுப்புங்கொண்டு பரந்த ரஹஸ்யமே பெரியவாச்சான் பிள்ளை ஸாதித்ததன்று என்று காஞ்சீ ஸ்வாமி வாதிக்கத் தொடங்கினதாகவும் அது தம்முடைய புத்தகங்கள் விற்பனையாகாதபடி செய்த சூழ்ச்சியென் றும் புத்தூர் ஸ்வாமிகளின் அபிப்ராயம்.

இனிகாஞ்சீ ஸ்வாமியின் அபிப்ராயம்;—

நெடுங்காலமாக தான் பல விஷயங்களில் ஆராய்ச்சி செய்துவந்தபோதிலும் இக்குறிப்பிட்ட விஷயத்தில் ஆராய்ச்சி செய்ய அவகாசமே ஏற்படாமல்போய்விட்ட தால் பரந்தரஹஸ்யம் பெரியவாச்சான்பிள்ளையருளியதா கவேமுன்பு தவறாக வெளிவந்திருந்ததை தாமும் நம்பியிருந் ததாகவும் இப்போதே ஆராய்ச்சிக்கு அவகாசம் ஏற்பட்ட தாகவும், ஆராய்ச்சி செய்ததில் பெரியவாச்சான்பிள்ளை யருளியதல்ல, நாயனாராச்சான்பிள்ளையே அருளியதாகத் தேறி நின்றதாகவும் அதுக்குத்தக்க ப்ரமாணங்களையும் எடுத்து உபபாதிக்கிறேன் என்று. இவ்வளவேதான் இவ்விவாதத்தின் ஸாரம்.

நாம் இன்றளவும் வந்த எல்லாவித புத்தகங்களையும் இங்கு ஆராய்வதில் முதலில் மூலகாரணமான அஷ்டாத் யாயீ ஷோடசாத்யாயீ என்ற இரண்டு புத்தகங்களையும் கவனிப்போம். அஷ்டாத்யாயியை முதலிலெடுத்துக்கொள்

http://acharya.org

வோம். இதில் 102-வது பாராவில் காஞ்சீ ஸ்வாமியே இருபிரிவுகளாகப் பிரித்திருக்கிறபடி இரண்டாவது பகுதியான அச்சுவிஷயமாக உள்ளவை நமக்கு ஸம்பந்தமில்லையாகையால் 83 முதல் 101 பாராக்களை விட்டிடுவோம். 62 முதல் 82 பாராவரையில் காஞ்சீ ஸ்வாமி தாம் எந்த விஷயத்திலும் ஒருக்கால் ப்ரமித்திருந்தால் பிறகு தத்வம் உணர்ந்தபோது தாம் கூசாமல் மாற்றிக்கொள்வது வழக்கம் என்பதையும் இந்த ஆராய்ச்சிக்குக் காரணத்தையும் இன்னும் ஒரு விஷயத்தில் ஆராய்ச்சிக்கு அவகாசம் ஏற்பட்டால் எப்படி செய்யவேண்டும் என்பதையும் விரிவாக நிரூபித்திருக்கிறார். 1 முதல் 13 பாராக்களில் இந்த அஷ்டாத்யாயீ எழுத நேர்ந்த காரணங்கள் முதலியவைகள் முன்னுரையாக எழுதப்பட்டிருக்கின்றன. 15 முதல் 61 வரையுள்ள பாராக்கள் இந்த ஆராய்ச்சிக்கு நேர் ஸம்பந்தமுள்ளன. இவைகளில் 14-15-16-17-32 வது பாராக்கள் ரத்நங்களுக்கு ஒப்பாகும். அடுத்தபடியாக 20-27-28-29-30-38-39-41-60-61 பாராக்களும் கவனிக்கப்படவேண்டியவைகளே. எஞ்சியுள்ள பாராக்களும் இங்கு மிகவும் உபகாரகமானவைகளே. இவ்வஷ்டாத்யாயியில் ஓரிடத்திலும் ஒரு சிறு கடுஞ்சொல்லும் புகுந்திருக்கவில்லை என்பதும் ஸந்தோஷமாகத் தெரிவிக்கக் கூடிய விஷயம்.

இனி ஷோடசாத்யாயியை எடுத்துக்கொள்வோம். பலவிடங்களில் பல வார்த்தைகள் மிகக் கடுமையாகக் கையாளப்படுகின்றன. முதல் இரண்டு அத்யாயங்கள் ப்ரக்ருதவிஷயத்திற்கு அவசியமே இல்லை. மூன்றாவது அத்யாயத்தில் காஞ்சீ ஸ்வாமிமீது குற்றம் சாட்டுகிறார். குற்றம் சாட்டினாலும் அக்குற்றத்தைத் தீர்மானிப்பது மத்யஸ்தர் காரியமல்லவா. இது நமது நண்பர்

http://acharya.org

அட்டவகேட்டுக்குத் தெரியாமலிருக்க முடியாது. 4-5-6 அத்யாயங்களானவை மூன்றுவது அத்யாயத்தின் தொடர்ச்சியே: அதிக வித்யாசமில்லை. ஆனால் நான்காவது அத்யாயத்தில் 11-15 பாராக்கள் மட்டும் சற்று கவனிக்கவுரியவை. அதாவது 11-வது பாராவில் காஞ்சீ ஸ்வாமி வெளியிட்ட பழைய நூல்களிலிருக்கும் வாக்கியங்களைக்கொண்டு அவர் மணவாள மாமுனிகளையே தூஷித்திருப்பதாகக் கல்பிக்கிறார். 15-வது பாராவில் பெரியவாச்சான் பிள்ளையிடமும் அபசாரப்படுவதாகக் காட்டிவரும் முறையில் நம்பிள்ளை ஸந்நிதியில் அர்ச்சாமூர்த்திகளை எழுந்தருளப்பண்ணியிருக்கும் ஸந்நிவேசத்தைக் குறிப்பிடுகிறார். இவ்விரண்டு விஷயங்களுக்கும் ஸமாதானம் காஞ்சீ ஸ்வாமியின் வெளியீடுகளில் மிக வலிதாகவே உள்ளது. அது நிற்க. காஞ்சீ ஸ்வாமியால் அநேகநாள்களுக்குமுன்பே ப்ரசுரம் செய்யப்பட்ட புத்தகங்கள் புத்தூர் ஸ்வாமியால் இப்போதே பார்க்கப்பட்டதெனச் சொல்ல முடியாது. அதுபோலவே இவர் நம்பிள்ளை ஸந்நிதியையும் சென்று ஸேவித்த வருஷம் மாஸம் தேதியையும் இவரே குறிப்பிட்டிருக்கிறார். அதிலிருந்து இவ்வளவு காலத்திற்குப் பிறகு, புதிதாக இந்த விவகாரம் ஆரம்பித்த பிறகு தூஷிக்கவேண்டிய அவசியமில்லை.

6-வது அத்யாயம் நமக்கு ஸம்பந்தமில்லாதது. மேலும் ஸொந்த விஷயம். 7 முதல் 12 அத்யாயங்களில் பல விஷயங்கள் கலந்து வந்தாலும் ப்ரக்ருத விவாதத்திற்கு ஸம்பந்தப்பட்டவைகள் ஆதலால் எடுத்துக்கொள்ளலாமானாலும் இவைகளில் 12-வது அத்யாயம் ஒன்றே மிக அவசியமானது. 13-வது அத்யாயம் இப்போது வேண்டியதே இல்லை. ஆனாலும் இதில் உள்ள 60-வது பாரா

http://acharya.org

புத்தூர் ஸ்வாமிபோல்வார் எழுதக்கூடியவையேயன்று. மனத்தால்கூட நினைக்கத்தகாதது. இவ்விதம் எழுதத் துணிந்தது என்ன காரணத்தாலோ? மறுபடி அவரே அவ் விடத்தைப்பார்த்தால் நிச்சயம் அநுதபிக்க நேரும். 63, 64 பாராக்கள் விலை செல்லத்தகாதவை. கேள்விக்குக் கேள்வி கேட்பதா அழகு? ஒருவர் கேள்வி கேட்டால் இது இப்படியென்று நிரூபிக்கவேணுமேயல்லாது இது மாதிரி பதிலுக்கு கேள்விகேட்பதானால் ஆயிரம் வருஷகா லம் கேட்டுக்கொண்டே போகலாம். இது எங்குத்தான் போய் நிற்கும். 14-15-16 அத்யாயங்கள் கலம்பகம். 16-வது அத்யாயம் 82-வது பாராவின் கடைசிவாக்யம் எவ்வளவு கீழ்த்தரம் என்பதை கவனிப்பதோடு சட்டரீதி யாகப் பார்த்தால் கூட இது மிகவும் தவறல்லவா?

இதற்குமேல் இவ்விரு நூல்களுக்கும் ஆதரவாகப் பலர் எழுதிய அபிப்ராயங்கள் அணிகலன் என்ற முறை யிலும் வேறு முறையிலும் வெளியாகியிருக்கின்றன. அவைகளைக் கவனித்தால் சிலர் ஸ்திரமான அபிப்ராய மில்லாமல் ஸமயத்துக்குத் தக்கபடியும் தாக்ஷிண்யத்திற்கு ஏற்கவும் நிர்ப்பந்தத்தினுலோ அல்லது வேறு எவ்வழி யாலோ அபிப்ராயத்தை மாற்றிக்கொண்டு வருவதுபோல் காண்கிறது. இவர்களுடைய அபிப்ராயம் கடைசியாக வெளிவந்ததில் பிறகும் மறுபடியும் இன்னமும் மாறுபட லாம். சிலரது அபிப்ராயங்கள் விஷயங்களோடுகூடினவாயி னும் அதிலிருக்கும் ஸ்வல்ப தூஷணங்களுமில்லாமலிருந் தால் மிகவும் அழகியதாயிருக்கும்.

நாம் இவ்விடத்தில்ஆராயவேண்டிய அவசியமான விஷயங்களாவன:—

1. பரந்தரஹஸ்யம் என்பது யார் அருளியது.

http://acharya.org

2. ஆச்சான்பிள்ளை என்பது யாரைக்குறிக்கும்.
3. இந்த விஷயத்தில் எந்த க்ரந்தங்களை ப்ரமாணமாகக் கொள்வது?

இம்மூன்று விஷயங்களே இங்கு மிகவும் முக்யமாக விசாரிக்க வேண்டியவை-இவைகளுக்கு ஸம்பந்தமில்லாத மற்ற விஷயங்களில் நமக்கு நேரிடையான ஸம்பந்தமில்லையாதலால் அவைகளில் கண் செலுத்தவில்லை.

இதன் நடுவில் ஒருவிஷயத்தை மாத்திரம் நாம் எடுத்துக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அதாவது ஷோடசாத்யாயி 13-வது அத்யாயம் 60-வது பாராவில் அபரசிகை வைஷ்ணவர்கள் பூர்வசிகை வைஷ்ணவர் குலத்தைச் சேர்ந்தவர்களை தூஷிப்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதற்குக் காரணமே கிடையாது. இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்களும் இன்றல்ல, எந்நாளும் குறை கூறியதாகவோ ஒருவர்க்கொருவர் தூஷித்துக் கொண்டதாகவோ கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஏன்? நயனாராச்சான்பிள்ளை எக்குலத்தைச் சேர்ந்தவர்! பரந்தரஹஸ்யம் இவரருளினது என்று சொல்லி இவருக்குப் பெருமை சொல்பவர் பெரியவாச்சான் பிள்ளையைப் பெருமைப் படுத்த எந்த விதமான தயக்கம் ஏற்படும். ஸ்ரீவைஷ்ணவ குலத்துக்குப் பிரதமாசாரியரான மாமுனிகளையும் மற்றவர்களையும் பூர்வசிகை ஸ்ரீவைஷ்ணவர்கள் இழித்துரைக்கிறார்களென்று சொல்லலாமா? இவ்விஷயம் இம்மாதிரி வெளிவந்தது மிகவும் சோசனீயம்.

அடுத்தபடியாக ஸமீபத்தில் வெளிவந்த சுதர்சனம் (20) ல் சில மதிப்புரைகள் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் எது எப்படியிருந்தாலும் நாம் இப்போது ஒரு

http://acharya.org

விஷயத்தை மாத்திரம் எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. அதாவது—

ஸ்ரீ ஸ்தானீகம் பார்த்தஸாரதி அய்யங்கார் ஸ்வாமியின் ஸ்ரீமுகம் என்ற தலைப்பில் வெளியான விஷயத்தில் இரண்டாவது பாரா—"பால்யத்தில் ஸ்ரீ. உ. வே மெய்யுவய்யங்கார் ஸ்வாமியினிடத்திலேயே காவ்ய சிக்ஷைபெற்று பத்து பன்னிரண்டு வருஷத்திற்குப் பிறகு 1928-ல் அங்கே திருமந்த்ரார்த்தமும் தத்வத்ரயமும் ஓதினபாக்கியம் அடியேனுக்கும் உண்டு. அப்போது ஆச்சான்பிள்ளை என்று பெரியவாச்சான்பிள்ளைக்கே திருநாமமாகத்தான் அந்த ஸ்வாமி ஸாதித்தார்" என்றுள்ளது.

உலகில் பலர் தன்னைப்பற்றித் தெரியப்படுத்தும் முறையில் இவ்விபூதியை அலங்கரித்துக் கொண்டிருக்கும் ஸ்வாமிகளைத் தெரிவிக்காமல் கீர்த்தி மூர்த்திகளாக நித்ய விபூதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமிகளைக் குறிப்பிடுவதே ஸஹஜமாகி விட்டது. விஷயம் மாறுதலானாலும் அவர்கள் பரம பதத்திலிருந்து மறுதலைக்கமாட்டார்களல்லவா. தாங்கள் குறிப்பிடும் ஸ்வாமிகளின் தனியனை உபகாரஸ்மிருதியாக ஒரு நாளாவது அநுஸந்தித்திருப்பார்களோ இல்லையோ; அவர்கள் தனியனை மட்டில் அநுஸந்தித்து வந்தாலாவது அவர்கள் அபிப்ராயத்தை ஏகலவ்யன் போலும் எம்பெருமானார் போலும் அறிந்துகொண்டுரைக்கலாம். இது நிற்க.

கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீ. உ. வே. மெய்யுவய்யங்கார் ஸ்வாமி அடியேனுக்குப் பிதா என்பது மட்டு மல்ல, ஜ்ஞாநாசார்யனுமாவர். ஸாஹித்யபாடங்களோ சாஸ்திர பாடங்களோ ரஹஸ்யக்ரந்தங்களோ மற்றும் திவ்ய ப்ரபந்த வ்யாக்யானங்களோ மந்திரோப தேசங்களோ எதுவாயினும் ஸ்வாமியிடத்திலேயே கேட்டவன் அடியேன்.

http://acharya.org

ரஹஸ்ய வ்யாக்கியானங்கள் அடியேனை பல முறை ஸேவித்ததுடன் மற்றும் பலர் ஸேவிக்கும்போதும் விடாமல் கூடவிருந்து அநுபவித்தவன்.

ஸ்ரீ பார்த்தஸாரதி அய்யங்கார் பால்யத்தில் காவ்ய சிக்ஷை பெற்றது உண்மை. பிறகு ஒரு ஸமயம் அவருடைய சிறிய தகப்பனாரான ஸ்ரீ. உ. வே. ரங்காசாரியர் ஸ்வாமி ரஹஸ்யக்ரந்தங்கள் ஸேவிக்க நேர்ந்தஸமயம் இவரும் சிலஸமயம் அவரிடம் காரியமாக வந்து போவதுண்டு; சற்று உட்கார்ந்துபோவதுமுண்டு. அப்போதெல்லாம் ப்ரகிருதவிஷய மான ப்ரசம்ஸையே ஏற்படவில்லை, இப்போது ஸ்ரீபார்த்தஸாரதி அய்யங்கார் எழுதியிருப்பது போல் அந்தஸ்வாமி ஸாதிக்கவும் அவகாசம் நேரவில்லை. உண்மையிப்படியிருக்க இப்போது இம்மாதிரி எழுதியிருப்பது என்ன காரணம் கொண்டு என்பது எம்பெருமானுக்கே தெரிய வேணும். ஆனல் இவருடைய வியாஸத்தில் "திருப்பந்தரார்த்தமும் தத்வத்ரயமும் ஓதின பாக்கியம்" என்றிருப்பதால் அவை மூலம் சந்தை சொல்லிக் கொண்டதாக எழுதினேனென்னலாம். அதுவும் உண்மையன்று. அப்போது ஆச்சான்பிள்ளை ப்ரஸ்தாவம் வர ப்ரஸக்தியுமில்லை.

நெடுநாட்களுக்கு முன் பல க்ரந்த பரிசீலன காரியங்களில் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. அயோத்யா ஸ்ரீ ராமாநுஜஜீயர் ஸ்வாமியுடன் ஸஹகாரியாக எழுந்தருளியிருந்தவர் இந்த ஸ்வாமி. அப்போதே இவ்விஷயத்தில் ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டது. இப்போது விரிவு அவச்யமில்லை. அயோத்யா ராமாநுஜஜீயர் ஸ்வாமி செய்திருக்கிற நிர்த்தாரணம் அவர் ஸ்வதந்திரமாகச் செய்ததன்று. ஸகல பெரியார்களுடையவும் திருவுள்ளமதுவே. கீர்த்தி மூர்த்திகளாய்த் திருநாட்டில் எழுந்தருளியிருப்பவர்களோடும் இற்றைக்கும் நம் கண் முன்னே ஆசார்ய

http://acharya.org

பீடத்தில் அமர்ந்து உபயவேதாந்த க்ரந்த ப்ரவசனங்கள் செய்து போரும் ஸ்ரீ.உ.வே. வித்வான். கோவிந்தாசார்ய ஸ்வாமி ப்ரப்ருதிகளோடும் வாசியற வ்யபதிஷ்டர்களான அனைவராலும் ஏககண்டமாக ப்ரசம்ஸிக்கப்பட்ட விஷயமே அது.

இனி ப்ரக்ருதத்தில் செல்ல இதில் மூன்றாவதான விஷயத்தை முதலில் எடுத்துக் கொள்வோம். இதில் ப்ரமாணங்களாக பரகாலநல்லான்ரஹஸ்யம், வார்த்தா மாலை, மாமுனிகள் வியாக்கியானங்கள், அஷ்ட ச்லோகீ பெரியபடி, பெரிய திருமுடியடைவு இவைகளை எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள். பலகால நல்லான் ரஹஸ்யம் என்பது ஒருவராலும் காலக்ஷேபக்ரந்தமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை, இதன் கர்த்தா பரகால தாஸர். பெரியவாச்சான்பிள்ளை நயனாராச்சான்பிள்ளை இவ்விரு வர்களுக்கும் சிஷ்யரென்று சொல்லப்படுகிறது. இவர் "மைவண்ணநறுங்குஞ்சி" வ்யாக்கியான கர்த்தாவைக் காட்டிலும் வேறுபட்டவர். இப்பரகால நல்லான் ரஹஸ்யத்தில் எட்டு இடங்களில் ஆச்சான்பிள்ளை திரு நாமம் வருகிறது, இதில். 4 இடங்களில் "வார்த்தை" என்றும் 3 இடங்களில் "அருளிச்செய்வர்" என்றும் வருகின்றது. ஓரிடத்திலாவது இன்ன இடத்தில் அருளிச் செய்தார் என்பது கிடையாது. "வார்த்தை" என்பவை களும் "வார்த்தாமாலை" போன்ற க்ரந்தங்களிலும் கிடை யாது. ஆகவே ஸந்தேஹத்தைப் போக்கி விளக்கக் கூடியனவாக இவை இல்லாததாலும், இந்தக்ரந்தத்தில் குறிப்பிட்டுச் சொன்னதாகக் கருதப் படும் ஒன்பதாவதி டத்திலுள்ளவாக்யங்கள் எங்கு இருக்கிறது என்பது ஸ் பஷ்டமாக இல்லாததாலும் பிரக்ருதவிவாதத்தில் இந்த க்ரந்தம் சிறிதும் உபயுக்தமாகாது. வார்த்தாமாலை. இதைச்

http://acharya.org

சேர்த்தருளியவராகச் சொல்லப்படுபவர் பின்பழகிய பெருமாள் ஜீயர். இந்த க்ரந்தத்தில் முப்பது இடங்களில் ஆச்சான்பிள்ளை திருநாமம் எடுக்கப் பட்டிருக்கிறது. இதிலும் வேறு விதமான ப்ரஸக்தி இல்லாமலிருப்பதால் ப்ரக்ருத விஷயத்தில் சிறிதும் உபயோகமாகாது. அஷ்டச்லோகீ வ்யாக்யானம் மணவாளமாமுனிகளுக்கு மிகவும் பிற்பட்ட காலத்தியது, ஆனாலும் அதில் பலவிடங்களில் பலவிதமான அடைமொழிகளுடன் ப்ரயோகம் செய்திருப்பதால் முழுதும் ஒருவருக்கு ஸாதகமாகாது.

பெரிய திருமுடியடைவு. இது எல்லோராலும் லேகக ப்ரமாதங்கள் மிகுந்ததவை யென்று கொள்ளப் படுவதால் நமக்கு இப்போது வேண்டா. எஞ்சியுள்ளது மணவாள மாமுனிகளின் திவ்ய ஸூக்திகள். மாமுனிகளின் திருவாக்கு எவ்விஷயத்தில் ஸ்பஷ்டமாகவுள்ளதோ அவ்விஷயத்தில் வேறு எங்கும் காடுபாயவேண்டியதில்லை. அல்லது தன்னிஷ்டப்படி அர்த்தம் செய்யவேண்டியதுமில்லை, விசதவாக்சிகாமணியான மாமுனிகள் வாக்கிலிருந்தும் நம்மால் தெரிந்துகொள்ள முடியாமற்போனால் எங்குத் தான் நாம் தெரிந்துகொள்ளமுடியும். நாம் எடுத்துக்காட்டவேண்டிய வாக்யங்களெல்லாம் புதிதல்ல, இவர்கள் கையாண்டவைகளே, ஆனாலும் எழுதும் முறை தான் வேறு. பரந்த ரஹஸ்யம் என்னும் க்ரந்தம் ரஹஸ்யத்ரய விவரணமாகும். பிள்ளையுலகாசிரியர் அருளிய முமுக்ஷுப்படி யென்னும் ரஹஸ்யத்ரய விவரண க்ரந்தத்திற்கு வியாக்யானம் செய்யப் புகுந்த மாமுனிகள் தாம் செய்தருளும் க்ரந்தத்தில் பூர்வர்களின் க்ரந்தங்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்ட வேண்டிய இடங்களில் ப்ரக்ருத விவாதாஸ்பதமான இப்பரந்தரஹஸ்யத்தினின்றும் சிலஎடுத்துக்காட்டுகிறார்.

http://acharya.org

இவ்விதம் பார்க்கும்போது திருமந்த்ரார்த்தம் என்னும் மாமுனிகளின் வியாக்யானத்தில் எட்டு இடங்களில் ஆச்சான்பிள்ளையென்னும் திருநாமத்தைக் கையாண்டிருக்கிறாரென்பது தெரிகிறது. ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியால் மாமுனிவன் மேற்கோள் விளக்கு என்கிற க்ரந்தம் அவதரித்திருக்கையாலே இங்கு விவரணம் அநபேக்ஷிதம்.

அந்த எட்டு இடங்களுள் ஓரிடத்திலாவது க்ரந்தத்தின் நாமமில்லை. ஆகவே ஆச்சான்பிள்ளை எந்த க்ரந்தத்தை யருளினார்? எந்த க்ரந்தத்திலிருந்து மாமுனிகள் மேற்கோளெடுக்கிறார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிவிட்டது. க்ரந்தநாமம் இல்லாமையாலே பரந்த ரஹஸ்யத்தில்தான் இவ்வாக்கியங்களிருக்கிறதா? ஆச்சான்பிள்ளைதான் பரந்த ரஹஸ்யம் அருளியவரா? ஆச்சான்பிள்ளை என்று சொல்லப்படுபவர் பெரியவாச்சான்பிள்ளைதானா? என்னும் விஷயங்களுக்கே இனி விடை அவச்யமாகும். பரந்த ரஹஸ்யத்திலிருக்கும் பங்க்திகளுக்கும் மாமுனிகள் எழுதியருளியிருக்கும் பங்க்திகளுக்கும் சிறிது வித்யாசமாகத் தோன்றினாலும் பரந்த ரஹஸ்யத்திலிருந்துதான் அப்பங்க்திகள் எடுக்கப்பட்டிருக்கிறதென்பது இதுவரை எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இனிமேல் யாராவது இல்லை செய்தால் அவ்விஷயத்தைப் பற்றி அப்போது ஆராய்வோம். அடுத்தபடியாக ஆச்சான்பிள்ளைதான் பரந்த ரஹஸ்யம் அருளியவரா? என்பது கவனிக்கப் பட வேண்டும். இதற்காகவும் வேறு பலபல க்ரந்தங்களில் தேடித்திரிய வேண்டா.

மாமுனிகளே அருளிய ஸ்ரீ வசன பூஷண வியாக்கியானத்தில் மூன்றிடங்களில் இவ்வாச்சான்பிள்ளை திருநாமத்தை எடுத்து ஸம்சய விபர்யய மில்லாமல் ஸான்

பஷ்டமாக மூன்றிடங்களிலும் வெவ்வேறு மூன்று க்ரந்தங்களுக்கு ஆசிரியராகவும் காட்டுகிறார். அதாவது, பரந்தரஹஸ்யம், மாணிக்கமாலை, ஜிதந்தே வியாக்கியானம் இவையருளியதாகக் காட்டியுள்ளார்.

இதிலிருந்து பரந்தாஹஸ்யம் ஆச்சான்பிள்ளை தான் அருளியது. ஜிதந்தா வியாக்கியானமும் ஆச்சான்பிள்ளையேயருளியது. மாணிக்கமாலையும் ஆச்சான்பிள்ளையேயருளியது என்கிற விஷயம் நன்கு தேறிவிட்டது. இங்கு ஆராய்ச்சி செய்யவேண்டியது—பரந்தரஹஸ்யம் ஆச்சான்பிள்ளையருளியதேயானாலும் ஆச்சான்பிள்ளை என்பவர் யார். பெரிவாச்சான்பிள்ளைதானு. அல்லது நயனாராச்சான்பிள்ளையா என்பதே. இதுவே இங்கு முக்யம். இதுவே விவாத விஷயம். இதற்காகவே நாம் இது எழுதுவதும். இங்குத்தான் கவனிக்கவேண்டியதும். இவ்விஷயத்துக்காகவும் வேறுபல க்ரந்தங்களையும் பல இடங்களில் தேடித்திரியவேண்டா. நமக்கு அரிய சேமநிதியாகவுள்ள மணவாளமாமுனிகளின் வியாக்யானம் ஒன்றே போதும். இங்குத் தெளியமுடியாதது வேறு எங்கும் தெளியாது. ஆதுநிகர்களிடம் போகவேண்டாம். இவ்வளவு விவாதத்துடன் பலகாலங்களையும் த்ரவ்யங்களையும் செலவழித்து விருப்பு வெறுப்புகளைச் சம்பாதித்திருக்கவும் வேண்டாம்.

மாமுனிகள்தாமே தத்வத்ரயத்திற்கும் வியாக்யானம் அருளியிருக்கிறாரல்லவா. அதில் 10 இடங்களில் ஆச்சான்பிள்ளை திருநாமம் வருகிறது. அவ்விடங்களில் க்ரந்தநாமம் கர்த்ருநாமம் ஆகிய இரண்டையும் நியமேந சேர்த்தே யருளுகிறார். விவரணம் என்று சில இடத்திலும் தத்வத்ரய விவரணம் என்று சில இடத்திலும் ப்ரயோகித்தாலும் இவ்விரண்டு க்ரந்தங்களும் ஒன்றுதான்.

http://acharya.org

க்ரந்த கர்த்தாவும் ஒருவர்தான் என்பதில் ஒருவித ஸம்சய மும் ஏற்படுவதற்கு இடமில்லை.

இந்த தத்வத்ரயத்திலேயே 103-வது—ஸூத்ரத்தில் "பெரியவாச்சான்பிள்ளையும் இப்படியிறே அருளிச்செய்தது" என்கிறார். இதுவே இங்கு முக்யமான இடம். அவதாரிகையிலும், 3,35,103 ஸூத்ரங்களிலும் ஆச்சான் பிள்ளை என்று நிர்விசேஷமாக ப்ரயோகித்து அதே 103-வது ஸூத்ரத்தில் புதிதாக வேறு விஷயத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கப் பெரியவாச்சான்பிள்ளையும் இப்படியிறேயருளிச்செய்தது என்று அருளுகிறார். இவ்விடத்தில் உம் என்பதுதான் உயிராகநோக்குதற்குரியது.

முன்பு நான்கு இடங்களிலும் பின் ஆறு இடங்களிலும் நிர்விசேஷமாக ப்ரயோகித்து நடுவில் விசேஷணத்துடன் ப்ரயோகித்தாரென்றால் அதிலும் உம் சேர்த்து ப்ரயோகித்துவிட்டால் இந்த வ்யக்தி வேறுபட்டவர்தான் என்று சொல்லுவதற்கு எவ்விதமான விசேஷ ஞானம் வேண்டும். சிறுவர்களுங்கூடவல்லவா ஸந்தேஹமறச் சொல்லக்கூடியது.

சுதர்சன பத்ராதிபர் சொல்லுவதுபோல் இரண்டுவித ப்ரயோகமும் ஒருவரைக் குறித்தே என்றால் அவருக்காக நாமும் ஒப்புக்கொள்வதில் ஒரு ஆக்ஷேபணையுமில்லை. உண்மையில் ஒன்றுமாத்திரம் கவனிக்கவேண்டியது அவசியமாகிறது. முதன் முதலாக எடுத்த அவதாரிகையில் மட்டிலாவது ஸவிசேஷமாக (பூர்ணமாக பெரிய—என்பதுடன்) ப்ரயோகித்து பின்னிட்ட பாகங்களில் ஆயிரமிடங்களிலானாலும் நிர்விசேஷமாகவே (பெரிய இல்லாமலே) ப்ரயோகித்திருந்தால் அவ்விடத்தில் ஆக்ஷேபிக்க முடியாததே. இங்கு அப்படியில்லையே. மேலும் ஒரே

http://acharya.org

ப்ரகரணத்தில் இரண்டுபேரையும் இரண்டு விதமாக எடுத்து ஒருபெயருக்கு மட்டில் உம் என்பதல்லவா சேர்த்திருக்கிறது. இதற்கு எவ்விதத்திலும் ஒழுங்கான சமாதானம் சொல்லமுடியாதே.

மாமுனிகளின் வாக்கில் இதல்லவோ பெரிய விசேஷம். விசதவாக்சிகாமணியல்லவா. ஸந்தேஹத்திற்கு அவகாசம் ஏது. இவ்விடத்தில் ஸுதர்சன பத்ராதிபர் அர்த்தம் செய்வது அழகல்ல. அவர் சொல்வது சற்றும் பொருந்தாது. ஒருவாறு விவாதத்திற்காகப் பேசுவதானாலும் இது ஒழுங்கு முறையன்று. முன்பு குறித்த ஸ்ரீவசனபூஷண ஸ்ரீஸூக்தி நமக்குக் கிடைக்காதபக்ஷத்தில் பரந்த ரஹஸ்யம் ஆச்சான்பிள்ளையருளியதுதான் என்பதை எதுகொண்டு நிர்ணயிக்க முடியும்? இவ்விஷயத்தில் எவ்வளவு உபகாரமாக மாமுனிகளின் திவ்ய ஸூக்தி இருக்கிறதோ அதுபோலவே ஆச்சான்பிள்ளையும் பெரியவாச்சான்பிள்ளையும் வெவ்வேறு வ்யக்திகள்தான் என்பதையும் ஸுஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கும்போது த்ருஷ்டியுள்ளவர்கள் எப்படி உணராமலிருக்கமுடியும்.

இவ்விஷயம் இவ்வளவு வ்யக்தமானபோது பரந்த ரஹஸ்யப்ரஸ்தாவமேயில்லாத பரகால நல்லான் ரஹஸ்யம் போன்ற க்ரந்தங்களில் ஏன் கண்செலுத்தவேண்டும். இதற்குமேல் இவ்விஷயத்தில் பதில் சொல்வதானாலும், ஆராய்ச்சி செய்வதானாலும் எந்தக்ரந்தங்களிலாவது பூர்ணமாக பெரியவாச்சான்பிள்ளை நயினாராச்சான்பிள்ளை இவ்விரு திருநாமங்களிலும் ஸந்தேஹம் ஏற்படாமல் இன்னார் இன்ன க்ரந்தத்தில் இன்ன விஷயம் அருளியிருக்கிறார் என்பது போன்ற பங்க்திகளையாவது அல்லது 'விவாத விஷயமான பரந்தரஹஸ்யம் பெரியவாச்சான்பிள்ளை யருளியது தான் ஏனெனில் நயினாராச்சான்பிள்ளையின் க்ரந்

தத்தில் அருளியிருக்கும் இன்னவிஷயத்திற்கு மாறுபட்டி ருக்கிறது' என்பனபோன்ற வித்யாசமான விஷயங்களைக் கொண்டாவது நிலைநிறுத்தவேணுமே தவிர வேறு விஷயங் களில் புகுவது உசிதமல்ல.

நாம் ஏற்கெனவே இந்த் விஷயத்தை ஒருவிதமாக எழுதிவிட்டோமாதலால் இனி மாற்றிக்கொள்ளக் கூடாது என்ற பிடிவாதமும் ஒருவருக்கும் தேவையில்லை. இவ் வாராய்ச்சிகளில் வெற்றி தோல்வி என்ற மனப்பான் மைக்கு இடமேயில்லை. இன்றல்ல என்று வேண்டுமானு லும் சிறந்த ப்ரமாணங்கள் கிடைத்தால் அதை எடுத்துக் காட்டலாம். உடனே பதில் ஏதோ ஒரு வழியில் எழுதியே தீரவேண்டுமென்று நினைத்து எவ்வழியிலும் இறங்கவேண்டாமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவ்விஷய ஆராய்ச்சிக்கு மணவாள மாமுனிகளின் க்ரந்தங்கள் தான் ப்ரமாண மென்றும் மற்றவை அப்ர மாணங்கள் என்றும் நமக்கு ஆக்ரஹமில்லை. விவாத விஷயத்தை நன்கு விளக்கி நிர்ணயமளிக்கத்தக்க க்ரந்தம் எதுவானுலும் கொள்ளத் தக்கதே. இந்த ஆராய்ச்சி விஷயமாக இன்னம் பல விஷயங்கள் எழுதவேண்டி யிருந்தாலும் இப்போது இவ்வளவே போதுமென்று நினைக்கிறோம்.

ஒரு விஷயம் முக்கியமாக உலகுக்குத் தெரிவிக்க வேண்டியதாயுமிருக்கிறது. இப்போது நாம் தெரிவிப் பதில் அஸத்யமிருந்தால் ருஜுவான வழியில் ஸத்யத்தை யெடுத்து உலகுக்குக் காட்டினுல் ஸந்தோஷமே. ஸுதர்சன பத்ரிகையில் வெளிவந்த அபிப்ராய பத்ரிகை களில் ஒன்றிலுள்ள பொய்மையைக் கீழே விவரிக்க ப்ராப்தமாயிற்று. விசாரிக்கையில் அப்பத்ரிகையில் வெளி

http://acharya.org

யிட்டிருக்கிற அபிப்ராய பத்ரிகைகள் பெரும்பாலும் நேர்மையான முறையில் வெளிவராதவை யென்றே தெரியவருகிறது. நேமிநாத் மஹாராஜ் என்பவருடைய கடிதமொன்று ஸுதர்சன பத்ரிகையில் வெளிவந்தது. அதில் ஆச்சான்பிள்ளையைப் பற்றியாவது பரந்தாஹஸ்யத்தைப் பற்றியாவது ஒரு விதமான அபிப்ராயமுமில்லை. எந்த விதத்திலும் அது வெளியிடக் கூடியதன்று. அதை ஒவ்வொருவரும் வாசித்துப் பார்க்கலாம். காஞ்சீ ஸ்வாமியின் அபாரமான பாண்டித்யத்தில் ஈடுபட்டவர் எழுதின கடிதமாகவே அது காண்கிறது. பொருந்தாத வாக்யங்களும் மேலே காண்கின்றது. இதில் ஏதோ க்ருத்ரிமமிருக்கவேணுமென்றே விவேகிகள் நினைக்கக் கூடியது. தத்துவம் அப்படியே யேற்பட்டுவிட்டது. இந்த விவாதம் ஸம்பந்தமாக காஞ்சீ ஸ்வாமியிடம் வந்திருந்த கடிதங்களை யெல்லாம் [அச்சிட்டு வெளிவந்தவை, அச்சிடாதவை என்கிற வாசியற] அடியேன் நேரில் காணவிரும்பி அவற்றை அனுப்ப முடியுமாவென்று கேட்டிருந்தேன்: அவை யெல்லாம் உடனே அனுப்பப்பட்டு அடியேனிடம் வந்து சேர்ந்திருக்கின்றன. அவற்றுள் நேமிநாத் மஹாராஜ் என்பவருடைய கடிதம் முன்னம் காணப்பட்டது. அதை உலகம் காணவேண்டியது மிகவும் அவச்யமென்று தோன்றி அது இதோ வெளியிடப்படுகிறது ;—

| | |
|---|---|
| ACHARYASWAMI,<br>Neminath maharaj, Zemindar<br>Rajpura-Rani Estate. | KASHIPUR,<br>Nainital Dt., O. T. Ry.<br>18, August 49. |

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமதித்யாதிப்படி எழுந்தருளியிருக்கும் உபே பிரதிவாதிபயங்கரம் அண்ணங்காராசார்யர்ஸ்வாமி ஸன்னதியில் அடியேன் தாஸஸ்ய விஞ்ஞாபனம்.

http://acharya.org

சமீபகாலத்தில் ஸ்ரீவைஷ்ணவ சுதர்சனபத்ரிகைக்கும் ஸ்வாமிக்கும் அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டு அதனுல் ஸ்ரீராமாநுஜனும் சுதர்சனமும் விவாதவிஷயங்கள் வெளியிட்டுக் கொண்டு வருவது மிகவும் துக்ககரமான விஷயம். எது எப்படியானபோதிலும் பிறர் தலையிடாமலிருக்க வேண்டும், தலையிடவும் இஷ்டமில்லை. அடியேன் 3, 4 மாத காலமாக ஸ்ரீ சாளக்கிராம யாத்திரை போயிருந்தபடியால் விஷயம் தெரியாது. அந்த (புத்தூர்) ஸ்வாமியெழுதிய கடிதங்களுக்கு பதில் முகமாகச் சில விஷயங்கள் எழுதும்போது ஸ்வாமி விஷயமும் வந்தபடியால் (Private) ப்ரைவேட் ஆக எழுதியதேயொழிய பத்ரிகையில் வெளியிடவல்ல. அவர் வெளியிட அதிகாரமில்லை. வெளியிடப்போகிறேனென்று அடியேனிடம் தெரிவிக்கவுமில்லை. இந்த சந்தர்ப்பத்தில் முன்பின் பாகங்களை நீக்கிவிட்டு அவர் தாமாகவே சில புதுவிஷயங்களைச் சேர்த்து எழுதியிருப்பது ஆச்சர்யமாக இருக்கிறது. அவரையே இது விஷயமாகக் கேட்டிருக்கிறேன். பதில் வரவில்லை, வந்தவுடன் விஞ்ஞாபனம்.

நிற்க. ஸ்வாமி ஸ்ரீ ராமாநுஜனில் எழுதியதும் அடியேனுக்குத் தெரியாது. எது எழுதினபோதிலும் உகப்பேயொழிய பிறிதொன்றில்லை. ஸ்வாமியிடத்திலும் ஸ்வாமி மேதையிலும் அடியேன் பரிவுகொண்டவன். ஸ்வாமியின் டிவ்யபந்யாஸங்களுக்கும் இயன்றதை முன்னமே செய்துள்ளேன். இப்படியிருக்க ஸ்வாமி விசாரிக்காமல் விஷயங்கள் வெளியிட்டதாக எழுதியுள்ளாரென்பதைக் கேட்க வியப்பெய்தினேன். பரந்தரஹஸ்ய கர்த்தா யாராக இருந்தபோதிலும் பாதகமில்லை.

அடியேன் நைமிசாரணியத்தில் கோவில் கட்டினதாக யாரிடமும் சொன்னதில்லை. அப்படி இன்னும் கட்ட

http://acharya.org

வுமில்லை. அதற்கு ஆவன பிரயத்தனங்கள் நடந்தனவே யொழிய காரியம் உடனே முடியவேண்டு மென்று செய்ய வேண்டிய கடமைகள் செய்யப்படுகின்றனவே யொழிய வேறில்லை. நைமிசாரண்யம்கோவில் கட்டும்பொழுது ஸ்வாமிக்குத் தெரிவிக்காமல் நடக்காது. *மற்றபடி ஸ்வாமி திருவுள்ளத்தில் ஆயாசம் வேண்டாம். ஸ்வாமியும் அப்படி எதாவது எழுத நேர்ந்திருந்தால் அதை திருத்திக்கொள்ள வேண்டுவதே ஸ்ரீ வைஷ்ணவ கடமையாகும் என்பதே பிரார்த்தனை. வாசகதோஷம் க்ஷமிக்கவும். தாஸன். ஆசார்யஸ்வாமி, நேமிநாத்.*

*  *  *  *  *

*இதைப்பற்றி இன்னமும் நாம் தெரிவிக்கவேண்டிய தொன்றிருக்கிறதோ? பம்பாய் வி. வி. அய்யங்கார் ஸ்வாமி, தென் திருப்பேரை ராமசந்திராசாரியர்ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர் அரையர் ஸ்வாமி இவர்களின் ஸ்ரீமுகங்கள் ஸ்ரீராமாநுஜன் 12ல் அச்சாகி வெளிவந்திருப்பதால் அந்த தத்துவங்களும் உலகுக்குத் தெரிந்தேயிருக்கிறது. இந்த கடிதங்களெல்லாவற்றினுடையவும் அஸல் காபிகளை அடியேனே ஸம்ரக்ஷிதமாக வைத்திருக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீமத்பரமஹம்ஸ காஞ்சீ அழகியமணவாளஜீயர்ஸ்வாமியின் ஸ்ரீமுகமென்று வெளிவந்திருப்பதும் அதிசங்கிக்கக் கூடியதாகவேயிருக்கின்றது. அந்த ஸ்ரீமுகம் அந்த ஜீயர்ஸ்வாமி எழுதினதாகவே இருக்கட்டும். அதில் விவாதவிஷயங்களைப்பற்றின அபிப்ராயம் சிறிதேனுமுண்டோ? உலகில் வ்யக்தித்வேஷங்கள் பலர்க்குப் பலவகையாக இருக்கலாம். அதனால் ப்ரைவேட் கடிதங்கள் பல எழுதலாம். அவற்றை உபயோகப் படுத்துகிற விதம் வக்கீல்களுக்குத் தெரியாததன்று.*

http://acharya.org

பிரசுரம் செய்வதற்கென்று நாம் அனுப்பாததை ப்ரசுரம் செய்துவிட்டாரே என்று, எழுதினவர்களும் தபிக்கும்படியும் உலகமும் வெறுக்கும்படியும் நடந்துகொள்வது அட்வகேட்டுகளுக்கு உற்றதோ? பாகவதாபசாரம் தம்மளவிலே நில்லாமல் அநாவச்யகமாகப் பெரியார்மேலும் ஏறுவதற்கு இடமளிக்கலாமோ?

உண்மையில் ஸ்ரீகாஞ்சீ அழகிய மணவாள ஜீயர் ஸ்வாமியின் ஸ்ரீமுகமென்று வெளியிடப் பட்டிருப்பதில் ப்ராக்ருத விவாத விஷயத்திற்குச் சார்பான நிரூபணம் எள்ளளவாவது உண்டோ? அதில் தமக்கு என்ன அனுகூலமிருக்கிறதென்று வக்கீல்ஸ்வாமி அதை வெளியிட்டுக் கொண்டாரென்று மஹான்கள் கேட்டால் பிராமாணிகமான பதில் சொல்லுவதற்கு ஏதேனும் இடமிருக்கிறதோ? * ப்ரயோஜநமநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே * என்கிறது சாஸ்த்ரம். இதில் ஒரு ப்ரயோஜனமுமில்லை யென்பது மாத்திரமல்ல. ஜ்ஞாநாதிகராயும் வயோதிகராயு மெழுந்தருளி யிருக்கிற அந்த ஜீயர்ஸ்வாமிக்கு வீணை ஒரு அபக்க்யாதி விளைவது விபரீத ப்ரயோஜனமாவும் தேறுகிறது. பத்ரிகை மூலமாக உலகுக்கு அறிவையூட்ட வேணுமென்று உயர்ந்த நோக்கங் கொண்டு தொண்டுசெய்யத் தோன்றியவர்கள் இப்படி கீழ்த்தரமான காரியங்களில் நெஞ்சைச் செலுத்துவதும் நெறியன்றே. இதற்குமேல், வையம் நிறைந்த வண்புகழாளரான ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருப்பதி. சின்ன ஜீயர் ஸ்வாமியை வாசாமகோசரமாக வைதிருப்பதும் நன்றாயில்லையே. தம் திருவுள்ளத்தில் ஸம்ப்ரதிபந்நமாகத் தோன்றினதை இதர தூஷணமின்றியில வெளியிட்டதற்காகப் பெரியார்களை தூஷிப்பதென்றால் இதற்கொரு முடிவு காணமுடியுமோ? நன்னெறி நிற்பாருடைய நெறியாகுமோ இது?

http://acharya.org

ஸ்ரீமத் திருப்பதி ஜீயர் ஸ்வாமியின் மீது எழுதப்படுகிற குற்றங் குறைகளெல்லாம் உண்மையானவை யென்றே இவ ரிஷ்டப்படி கொள்வோம். அவை இவர்க்கு எப்போது தெரி யுமோ அப்போதே தம் பத்ரிகையில் வெளியிடப் பட்டிருக்க லாம். இப்போது வெளியிடுவது எதற்காக? ஆச்சான் பிள்ளை விஷயத்தில் தம்முடைய அபிப்ராயத்தைச் சார்ந்து அந்த ஸ்வாமி எழுதியருளவில்லை யென்கிற கோபத்தினாலும் துக்கத் தினாலுந்தானே அநுவாதம் செய்யவும் தகாத உக்ர நிந்தைகள் பொழியப் பட்டிருக்கின்றன. அந்த ஜீயர் ஸ்வாமியே இவர்க்கு அநுகூலமாக ஒருவரி எழுதியிருந்தால் அப்போது இவர் எவ் வளவோ போற்றி யிருப்பாரன்றோ.

இதை ப்ராமாணிகர்களே ஆராயக் கடமைப்பட்டிருக் கிறார்கள்.

http://acharya.org

# முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ புத்தூர் ஸ்வாமி அவரது பத்திரிகையை நமக்கு கிரமமாக அனுப்புவதில்லையானாலும் இன்று அதைக் (21) காண நேர்ந்தது. அதில் எப்போதும் போலவே இப்போதும் நிந்தைகளே மலிந்துள்ளன. நமது நண்பர் இவ்வழியிலேயே வெற்றிபெறத் திட்டமிட்டிருக்கக் கூடுமோ என்று கூட நினைக்கக் கூடியதாக விருக்கிறது.

நமக்கும் அவகாசம் பிராப்தமானாலும் நாம் இச் சிறு புத்தகத்தில் முதன் முதலில் குறித்திருப்பது போல சிறிதும் நிந்தைக்கே இடமிருக்கக் கூடாது என்னும் வரம்பிலேயே நிற்கிறோம். நமது நண்பர் இனியும் இவ்வழியில் செல்லமாட்டாரென்றே நம்புகிறோம்.

நன்னிலையில் இருக்கவேண்டியவர்களுக்கு இது தகாது தகாது தகாது. விஷயங்களிலிறங்கி மிகவும் சிரமப்பட்டாவது வெற்றி பெறுவதே மேல். சக்தி இருந்தால் எவ்வளவும் எழுதலாம். இதில் அனைவருக்கும் அநேக நன்மைகளும் உண்டு. இவ் வேண்டுகோள் பழுதாகாது என்றே இத்துடன் நிற்கிறோம்.

யாஞ்சி ந்யாயவ்ருத்தஸ்ய திர்யஞ்சோபி ஸஹாயதாம் ।

—ஸ்ரீ. மெ. ஸ்வா.